1990 மே 7

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நானும் நேரிலே பார்த்தேன். கெம்பிளாஸ்ட்டிலேயிருந்து வருகின்ற அந்தத் தண்ணீர் அணையிலே கலந்து, தண்ணீரினுடைய கலரே மாறிப் போயிருந்தது. நானே கேட்டேன் அதிகாரிகளை, ஏன் தண்ணீர் கலர் இப்படி மாறியிருக்கிறதே என்று. அந்த கெம்பிளாஸ்ட்டினுடைய கழிவு நீரைத் திறந்து விட்டு விடுகிறார்கள் என்றார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னால்கூட நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் எழுப்பி இருந்தார்கள். அதை நாங்கள் விடவில்லை; நாங்கள் அதற்கு வேறு வழி கண்டிருக்கிறோம் என்று அந்தக் கம்பெனி தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் அதிகாரிகளைத் திடீர் என்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து தண்ணீர் கலக்கிறதா என்று பார்த்து எங்களுக்குத் தெரிவிக்கும்படி தெரிவித்திருக்கிறோம். உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் சொன்னவைகள் யாவும் உண்மை.

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் விவசாயத்திற்கு மிக முக்கியமாகப் பயன்படும்...... (மணியடிக்கப்பட்டது).

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினுடைய மழைக்கால மீதமான வேஸ்டேஜ் தண்ணீரைப் பாரூர் ஏரியின்பேரிலே விடப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது. அப்படி விடப்படும் வேஸ்டேஜ் நீரை பாரூர் ஏரியினுடைய கொள்ளளவில் கணக்கிடப்படுகிறது என்பதை அரசு மாற்றியதனாலே, விவசாயிகளின் அறுவடைக்கு ஏறத்தாழ ஒன்றரை மாதக் காலம் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை அரசு பரிசீலித்து ஏரியின் கொள்ளளவைக் குறைப்பதை அரசு கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்ளே, புதிய செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டால் அது குறித்து விவரமாக பதிலை அளிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

மின் கம்பங்கள்.

* 5325—திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய பகுதியில் 1983 ஆம் ஆண்டு மழை மற்றும் சூறைக் காற்றால் சாய்ந்த மின் கம்பங்கள் மீண்டும் நடப் பட்டு துண்டித்த மின் இணைப்பை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

9-30 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், முத்துபேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 22.12.83 மற்றும் 23.12.83 அன்று மழை மற்றும் சூரைக்சூாற றால் சாய்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து மின் கம்பங்கள் 15.7.84-க்குள் மாற்றப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

திரு. ஜி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, சூறைக் காற்றால், வெள்ளத்தால் சாய்ந்து இருக்கிற மின்கம்பங்கள் இடும்பாவனம், கீழப்பாண்டி, தொண்டியக்காடு ஆகிய பகுதிகளில் இன்றுவரையில் 1983-ஆம் ஆண்டிலிருந்து செப்ப னிடப்படவில்லை. சாய்ந்த நிலையிலேயே அவை கீழே விழுந்து கிடக்கின்றன. அமைச்சர் அவர்கள் அவற்றை செப்பனிட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாக செப்பனிடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, என்னிடத்தில் இலாக்கா தெரிவித்ததன்படி அவற்றை செப்ப னிட்டதாக அறிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் கூறுவதை நான் அதைவிட அதிகமாக மதிக்கிறேன். அப்படி சாய்ந்த நிலையிலேயே இருக்குமானால் உடனடியாக அவற்றை நிமிர்த்துவதற்கு இன்றே ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இது போன்ற மின்கம்பங்கள் சாய்ந்து மாணவர்கள் கூட இரண்டு பேர் சென்ற ஆண்டு இறந்து இருக்கிறார்கள். இந்த ஆண்டும் ஆம்பலாபட்டியில் பள்ளிக்குச் சென்ற இரண்டு மாணவர்கள் மின் கம்பங்கள் சாய்ந்து இறந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, போட்டிருக்கிற கம்பங்கள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், அவற்றை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் கான்கிரிட் மின்கம்பங்களை தயாரிக்கும் பொறுப்பை கான்டிராக்டிற்கு விடாமல் அரசே தயாரிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு கவனத்தில் கொள்ளும்.

1990 மே 7

திரு. ஆர். மகேந்திரன் : தலைவர் அவர்களே, பல ஊராட்சி மன்றங்களில் மிகவும் மோசமான நிலையில் உள்ள மின்கம்பங்களை எல்லாம் மாற்றிவிட்டு புதியதாக போட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி பல ஆண்டுகளாகியும் புதிய கம்பங்கள் அமைக்கப்படாமல் இருக்கிறது. எனவே, அவற்றை மாற்றிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்தில் புயலால் சாய்ந்து போன மின் கம்பங்களைப் பற்றிய கேள்வியாகும். நின்று கொண்டிருக்கிற மின்கம்பங்களைப் பற்றியது அல்ல. எனவே, சாய்ந்த கம்பங்களை நிமிர்த்தி விட்டு, அடுத்தபடியாக நின்று கொண்டிருக்கிற கம்பங்கள் மீது கவனத்தை செலுத்துவோம்.

வேலை பார்க்கும் பெண்கள் விடுதி.

3230—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் வேலை பார்க்கும் பெண்கள் விடுதி கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

5014—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிருக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் பனை நார் பெட்டி முடைதல், அப்பளம் வடகம் தயார் செய்தல், வயர் கூடை பின்னுதல் போன்ற தொழில்களுக்கும் கடன் மற்றும் மானியம் வழங்கப்படுமா?